[12th March 1969

THE HON. SRI R. VENKATARAMAN: அந்தச் சலுகை இப்பொழுதே இருக்கிறது.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, whether legal assistance is given to poor clients in cases coming under the Workmen's Compensation Act alone or also in cases coming under the Industrial Disputes Act, Labour Disputes Act, and other Labour Acts?

THE HON. SRI R. VENKATARAMAN: This facility is available only to cases coming under the Workmen's Compensation Act.

Sudarsanam Oil Mills, Limited, Katpadi

*334 *Q.*—SRI M. P. SARATHI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) காட்பாடி "சுதர்சனம் ஆயில் மில்ஸ் லிமிடெட்" டிற்கு வழங்கிய கடனில் இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இன்னும் வசூலிக்கப்படவேண்டிய தொகை எவ்வளவு?

(இ) இதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) A sum of rupees one lakh twenty-one thousand four hundred and twenty-five (Rs. 1,21,425) has been credited to Government.

(*b*) & (*c*) The distribution of sale proceeds of the Mills is still in Court.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—STATEMENT BY THE HON. MINISTER FOR LOCAL ADMINISTRATION.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Mr. Speaker, Sir, on 6th March 1959 in reply to starred question No. 607 by Sri V. K. Kothandaraman, M.L.A., I gave certain particulars about the chank and pearl fisheries in Madras State. Arising therefrom and in reply to a supplementary question by Sri K. B. S. Mani, M.L.A., seeking information as to whether the State Government would recommend to the Central Government to provide facilities for free medical aid to the pearl and chank divers, in view of the large income derived by the Central Government in the pearl and chank fisheries, I stated that the matter would be considered. What I actually meant was, the question of medical relief to the divers would be considered by this Government inasmuch as the pearl and chank fisheries in

12th March 1960] [Srimathi Lourdhammal Simon]

Madras State are the properties of the Government of Madras and the profit realised or the loss sustained in conducting the above pearl and chank fisheries will be the charge of the Government of Madras only and the Central Government have nothing to do with it.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960–61—*cont.*

MR. SPEAKER: இப்பொழுது பட்ஜெட்டின் மீது பொது விவாதம் தொடர்ந்து நடக்கும். கனம் அங்கத்தினர் சின்ன துரை அவர்கள் முதலில் பேசுவார்கள். அவர்களுக்கு 20 நிமிஷம் ஒதுக்கிவைக்கிறேன். அவர்கள் பேசலாம். 9-30 a.m.

* SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, ஒரு கட்சியினுடைய பொருளாதாரக் கொள்கை அந்தக் கட்சியினுடைய தன்மையையும், அந்தக் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிற தத்துவத்தின் தன்மைகளையும் வெளிப்படுத்திக் காட்டும் என்று கருதப்படுவது உண்டு. அதேபோல ஒரு சர்க்காரினுடைய வரவு செலவு அறிக்கை அந்த சர்க்கார் அனுஷ் டிக்கின்ற பொருளாதார கொள்கையை தெளிவுபட எடுத்துக் காட்டும் என்று கருதப்படுகிறது. அந்த வகையிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபை முன்பு சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கையை பார்க்கிறபொழுது, இந்த சர்க்கார் சார்பாக அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா, அரசாங்கத்தை நடத்துகிற காங்கிரஸ் சர்க்கார் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா அல்லது சுதந்திரக் கட்சியின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக் கிறதா என்ற ஐயம் இயல்பாகவே என்னுடைய மனதில் எழு கின்றது. இதை நிதி அமைச்சர் அவர்கள், நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் சர்க்கார் சார்பாக தெளிவுபடுத்தவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். வெளிப்படையாகப் பார்த்தால் காங்கிரஸ் கட்சி சர்க்கார் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையாக தோற்றம் அளித்தபோதிலும், உள்ளே நன்ருக ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரக் கட்சி எந்த தத்துவங் களை இன்றைக்கு பேசிவருகின்றதோ, எந்தக் கொள்கைகளை அனுசரிக்கவேண்டும் என்று வெளிப்படையாக பறைசாற்றி வரு கிறதோ, அவைகளை மறைமுகமாக ஏற்றுக்கொண்டு அனுஷ் டிக்கிற முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற ஒரு நிதி நிலை அறிக்கைதான் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனுலே தான் நான் நினைக்கிறேன், இந்த நிதி நிலை அறிக்கை சம்பந்த மாக தன்னுடைய அபிப்பராயங்கள் சொல்லுகிறபொழுது ஒரு சுதந்திரக் கட்சி பிரமுகர் " இது மிகுந்த ஏமாற்றத்தை அளிக் கிறது " என்று சொன்ஞர்கள். உண்மையிலேயே இது அவர் களுக்கு பெரிய ஏமாற்றமாகத்தான் இருக்க வேண்டும். தாம் அனுசரிக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்த கொள்கை களை காங்கிரஸ் சர்க்கார் அனுசரித்துவிட்டதே, நாம் சொல்லு வதற்கு இனி என்ன இருக்கிறது என்று அவர்களுக்கு இது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். அது எப்படி இருக்குமோ தெரியாது. உண்மை யிலேயே சோஷலிஸ தத்துவத்தை அமுல் நடத்தவேண்டும்